மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு கோருரிமை தீர்ப்பாயம், கும்பகோணம்

(கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கும்பகோணம்)

முன்னிலை - **திரு. G. மணிகண்டராஜா, பி.ஏ., பி.எல்.,**

தீர்ப்பாய நீதிபதி (கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி)

கும்பகோணம்,

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் தேதி திங்கட்கிழமை

**எம்.சி.ஓ.பி எண். 176/2023**

**CNR No.TNTJ190001352025**

கோவிந்தராஜ், த/பெ. சுப்பிரமணியன், வயது 65, க.எண். 18,
நடுத்தெரு, புங்கஞ்சேரி, வலங்கைமான் தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம். .....மனுதாரர்

-எதிர்-

1) ஆனந்தபாபு, த/பெ. சடகோபன், வயது 45, கீழத்தெரு,
வலங்கைமான் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.
2) கிளை மேலாளர், தி ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி (பி) லிட்.,
முதல்தளம், கோபால்ராவ் நூலக கட்டிடம், டவுன்ஹால் ரோடு,
கும்பகோணம். .....எதிர்மனுதாரர்கள்

இம்மனு இன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.ராஜா அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.R.வாசுதேவன் அவர்கள் ஆஜராகியும், 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.K.சாரங்கபாணி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

மனுதாரருக்கு 12.02.2023 ஆம் தேதி விபத்தினால் ஏற்பட்ட கொடுங்காயங்களுக்காக ரூ.10,00,000/- வட்டியுடன் இழப்பீடு கோரி மோட்டார் வாகன சட்டம் 1988 பிரிவு 140, 166 மற்றும் உ/இ 3(1)-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம்**:

மனுதாரருக்கு விபத்தின் போது வயது 65 ஆகும். மனுதாரர் விபத்திற்கு முன்பு தனியார் துறையில் வேலை செய்து மாதம் ரூ.15,000/- வருமானம் ஈட்டி வந்தார். கடந்த 12.02.2023 அன்று இரவு சுமார் 7.30 மணியளவில் மனுதாரர் தனது வீட்டிற்கு செல்வதற்காக வலங்கைமான் - குடவாசல் மெயின்ரோட்டில் ஆண்டாங்கோவில் பஸ்ஸ்டாப் அருகில் ரோட்டின் இடதுபுற ஓரமாக மிதிவண்டியுடன் நின்று கொண்டிருந்த போது அதே ரோட்டில் கிழக்கில் இருந்து மேற்குநோக்கி வந்த TN-68-AH-6018 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஆரன் அடிக்காமலும், கவனக்குறைவாகவும், ஓட்டி வந்து மனுதாரரின் மீது பயங்கரமாக மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார். மேற்படி விபத்தினால் மனுதாரருக்கு வலது கால் தொடை, இடது கால், தலை மற்றும் மார்பில் கொடுங்காயம் ஏற்பட்டு கும்பகோணம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக 12.02.2023 அன்று அனுமதிக்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக 13.02.2023 அன்று தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 15.02.2023 அன்று விடுவிக்கப்பட்டுள்ளார். மனுதாரர் சிகிச்சை செலவாக ரூ.1,00,000/- வரை செலவு செய்துள்ளார். மேற்படி விபத்தில் சம்மந்தப்பட்ட TN-68-AH-6018 என்ற பதிவு எண் கொண்ட வாகன ஓட்டுனர் மீது வலங்கைமான் காவல்நிலைய குற்ற எண்.50/2023-ல் இதச பிரிவுகள் 279, 337-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்திற்கு காரணம் 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை ஓட்டிய ஓட்டுனரின் கவனக்குறைவே ஆகும். மேலும் 1ஆம் எதிர்மனுதாரர் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளர் என்பதாலும், 2ஆம் எதிர்மனுதாரர் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை காப்புறுதி பெற்றவர் என்பதாலும் எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ அல்லது தனித்தோ ரூ.10,00,000/- வட்டியுடன் மனுதாரருக்கு

இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளார்கள்.

3) **<u>1 ஆம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>**:

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கு நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரரின் அஜாக்கிரதையும், கவனக்குறைவுமே விபத்திற்கு முழு காரணம். 1ம் எதிர்மனுதாரர் எவ்விதத்திலும் பொறுப்பாக மாட்டார். விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் 2 ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனம் 2 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு அது நடைமுறையில் இருந்துள்ளது. விபத்திற்கு மனுதாரர் தான் காரணம். 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எவ்வித இழப்பீடும் வழங்க கடமைப்பட்டவர் அல்ல. 1ம் எதிர்மனுதாரரை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டப்படுகிறது.

4) **<u>2 ஆம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>**:

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கு நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயங்களை அவர் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். 1 ஆம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு காப்பீட்டு பாலிசி இருந்தது என்பது குறித்தும் அதன் ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் இருந்து என்பது குறித்தும் 1 ஆம் எதிர்மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். TN-68-AH-6018 என்ற பதிவு எண் கொண்ட வாகனம் 2 ஆம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதும், ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் இருந்ததா என்பது குறித்தும் நிரூபிக்கப்பட வேண்டிய அம்சமாகும். மனுதாரர் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி திடீரென சாலையை கடந்ததால் மேற்கண்ட விபத்தானது ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்திற்கு மனுதாரரின் கவனக்குறைவே காரணம் ஆகும். சில நாட்கள் மட்டுமே மனுதாரர்

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளதாலும், மனுதாரருக்கு நிரந்தர இயலாமை ஏதும் இல்லை என்பதாலும், மனுதாரருக்கு இழப்பீட்டு தொகை ஏதும் கிடைக்கத்தக்கதல்ல. மனுதாரரின் தொழில் மற்றும் வருமானம் ஆகியவற்றை நிரூபிக்கும் வண்ணம் சாட்சி, சான்றாவணங்களை முன்னிடவில்லை. மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டு தொகை மிகவும் அதிகம். இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

**5) <u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

மனுதாரர் தரப்பில் மனுதாரர்- ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.த.சா.ஆ.1 முதல் ம.த.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் முன்னிடப்படவில்லை. 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் மோட்டார் வாகன சட்டம் பிரிவு 170-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**6) <u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்</u>**:

| | |
|---|---|
| 1) | யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது? |
| 2) | மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் யார்? |
| 3) | மனுதாரருக்கு கிடைக்ககூடிய இழப்பீட்டுத் தொகை எவ்வளவு? |

**7) <u>பிரச்சனை எண்.1 ற்கான தீர்வு</u>:**

(i) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, சாட்சி, சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. கடந்த 12.02.2023 அன்று இரவு சுமார் 7.30 மணியளவில் மனுதாரர் தனது வீட்டிற்கு செல்வதற்காக வலங்கைமான் - குடவாசல் மெயின்ரோட்டில் ஆண்டாங்கோவில் பஸ் ஸ்டாப் அருகில் ரோட்டின் இடதுபுற ஓரமாக மிதிவண்டியுடன் நின்று கொண்டிருந்த போது அதே ரோட்டில் கிழக்கில் இருந்து மேற்குநோக்கி வந்த TN-

68-AH-6018 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஆரன் அடிக்காமலும், கவனக்குறைவாகவும், ஓட்டி வந்து மனுதாரரின் மீது பயங்கரமாக மோதியதில் மனுதாரருக்கு வலதுகால் தொடை, இடதுகால், தலை மற்றும் மார்பில் கொடுங்காயம் ஏற்பட்டு கும்பகோணம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக 12.02.2023 அன்று அனுமதிக்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக 13.02.2023 அன்று தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 15.02.2023 அன்று விடுவிக்கப்பட்டுள்ளார் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிகிச்சை செலவாக ரூ.1,00,000/- வரை செலவு செய்துள்ளார் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1ஆம் எதிர்மனுதாரர் இருச்சக்கர வாகனத்திற்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை மற்றும் காப்பீட்டு பாலிசி இல்லை என்றும், 2 ஆம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றும் சிகிச்சை தொடர்பான ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் மேற்கண்ட விபத்திற்கு 1ஆம் எதிர்மனுதாரர் ஓட்டுனர் காரணம் இல்லை என எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ii) 1ஆம் எதிர்மனுதாரர் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும், மேற்படி இருச்சக்கர வாகனத்திற்கு காப்பீட்டு பாலிசி உள்ளது என்றும், ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது என்றும் கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். மேற்கண்ட விபத்தானது மனுதாரர் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி திடீரென்று அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் சாலையை கடந்ததால் தான் ஏற்பட்டது என கற்றறிந்த 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். 1ஆம் எதிர்மனுதாரர் ஓட்டுனரால் தான் விபத்து ஏற்பட்டது என மனுதாரர் புகாரிலும், மனுவிலும் குறிப்பிட்டுள்ளார். ம.சா.ஆ.1/முதல் தகவல் அறிக்கை மற்றும் ம.சா.ஆ.8 குற்ற இறுதி அறிக்கையில் 1ஆம் எதிர்மனுதாரரின்

ஓட்டுனரின் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்து குறித்து 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் விபத்தை நேரடியாக பார்த்த சாட்சிகளை விசாரிக்கவில்லை. மனுதாரர் தரப்பு சாட்சியத்தை மறுக்கும் வகையில் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் முன்னிடப்படவில்லை. எனவே மேற்கண்ட விபத்திற்கு 1ஆம் எதிர்மனுதாரர் ஓட்டுனர் தான் காரணம் என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கின்றது.

8) <u>பிரச்சனை எண். 2-ற்கான தீர்வு</u>:

(i) மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் யார் என்பது தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாகும். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் அஜாக்கிரதையாலும், கவனக் குறைவாலும் விபத்து ஏற்பட்டது என்றும், 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் 2ம் எதிர்மனுதாரரான காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளார் என்றும் மனுதாரர் தரப்பில் வாதம் முன் வைக்கப்பட்டது. 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் காப்பீட்டு பாலிசி ம.சா.ஆ.6 ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விபத்து 12.02.2023 ல் நிகழ்ந்துள்ளது. காப்பீடு பாலிசி 26.02.2022 ல் இருந்து 25.05.2027 வரை நிலுவையில் இருந்துள்ளது. விபத்து சமயத்தில் பாலிசி நிலுவையில் உள்ளது நிரூபிக்கப்பட்டுள்ளது.

(ii) 1ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் 2ஆம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டது அல்ல என்று கற்றறிந்த 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இருப்பது குறித்து ம.சா.ஆ.3 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.3 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் பெயர்

ஆனந்தபாபு என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி 1ம் எதிர்மனுதாரர் ஆனந்தபாபு என்பவரின் ஓட்டுநர் உரிமம் ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரருக்குரிய இழப்பீட்டு தொகையை 2 ஆம் எதிர்மனுதாரர் பகர பொறுப்பின் அடிப்படையில் வழங்க கடமைப்பட்டுள்ளார் என பிரச்சனை எண்.2-ற்கு தீர்வு காணப்படுகிறது.

9) **<u>பிரச்சனை எண்.3-ற்கான தீர்வு:</u>**

(i) விபத்து சமயத்தில் மனுதாரர் விவசாய வேலை செய்து மாதம் ரூ.15,000/- சம்பாதித்து வந்துள்ளார் என்று மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்திலும் கூறப்பட்டுள்ளது. விபத்தினால் மனுதாரருக்கு வலதுகால் தொடை, இடதுகால், தலை மற்றும் மார்பில் கொடுங்காயம் ஏற்பட்டது என்று மனுவில் குறிப்பிட்டுள்ளது மற்றும் 12.02.2023 அன்று கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 13.02.2023 அன்று மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 15.02.2023 அன்று விடுவிக்கப்பட்டுள்ளார் என்பது ம.சா.ஆ.2, 3 தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வழங்கிய விடுவிப்பு சான்று மற்றும் காயச்சான்றின் மூலம் அறிய முடிகிறது.

(ii) மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று ம.சா.ஆ.3 காயச்சான்று ஆவணத்தின் மூலம் தெரியவருகிறது. எனினும் மனுதாரர் 12.02.2023 அன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 15.02.2023 அன்று விடுவிப்பு செய்யப்பட்டுள்ளார். சாதாரண காயமாக இருப்பினும் காயத்தின் தன்மை மற்றும் உபாதை அதிகமாக இருப்பதாகவே ம.சா.ஆ.3 மூலமாக தெரியவருகிறது. எனவே, மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கும் வலி மற்றும் துன்பம், உதவியாளர் செலவு, ஊட்டச்சத்து செலவு, போக்குவரத்து செலவு, வருமான இழப்பு, உடை சேதத்திற்கான செலவு ஆகியவற்றிற்கு

இழப்பீடு அனுமதிக்கத்தக்கதாகும்.

10) <u>வலி மற்றும் துன்பம்</u>

விபத்தினால் மனுதாரருக்கு வலதுகால் தொடை, இடதுகால், தலை மற்றும் மார்பில் காயங்கள் ஏற்பட்டு அதற்காக 5 நாள் உள்நோயாளியாக கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனை மற்றும் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு இருப்பதால் வலி மற்றும் துன்பம் அதிகமாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே வலி மற்றும் துன்பத்திற்கு ரூ.30,000/- (ரூபாய் முப்பதாயிரம்) நிர்ணயிக்கப்படுகிறது.

11) <u>உதவியாளர் செலவு</u>

விபத்தினால் மனுதாரருக்கு வலதுகால் தொடை, இடதுகால், தலை மற்றும் மார்பில் காயங்கள் ஏற்பட்டு அதற்காக 5 நாள் உள்நோயாளியாக கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனை மற்றும் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு இருப்பதால் அவருக்கு உதவியாளர் தேவைப்படும் என்பதில் ஐயமில்லை. எனவே உதவியாளர் செலவுத் தொகையாக ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம்) நிர்ணயிக்கப்படுகிறது.

12) <u>ஊட்டச்சத்து உணவு</u>

மனுதாரருக்கு விபத்தினால் வலதுகால் தொடை, இடதுகால், தலை மற்றும் மார்பில் காயங்கள் ஏற்பட்டுள்ளதால் அவருக்கு ஊட்டச்சத்து உணவு தேவைப்படும் என்பதில் ஐயமில்லை. எனவே ஊட்டச்சத்து உணவிற்காக ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம்) நிர்ணயிக்கப்படுகிறது.

13) **<u>போக்குவரத்து செலவு</u>**

மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டு முதலில் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுள்ளார். மேலும் மனுதாரருக்கு விபத்தினால் வலதுகால் தொடை, இடதுகால், தலை மற்றும் மார்பில் காயங்கள் ஏற்பட்டு இருப்பதால் பல முறை மருத்துவமனைக்கு சென்று வந்திருக்க வேண்டியிருந்திருக்கும். அதனை கருத்தில் கொண்டு போக்குவரத்து செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம்) வழங்கப்படுகிறது.

14) **<u>வருமான இழப்பு</u>**

விபத்தினால் ஏற்பட்ட இயலாமைகளாலும், வலதுகால் தொடை, இடதுகால், தலை மற்றும் மார்பில் காயங்கள் ஏற்பட்டு அதற்காக 5 நாள் உள்நோயாளியாக கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனை மற்றும் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு இருப்பதால் மேற்கண்ட காயங்களுக்காக மனுதாரர் சில நாட்கள் ஓய்வு எடுத்திருக்க வேண்டும். அதனை கருத்தில் கொண்டு வருமான இழப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம்) வழங்கப்படுகிறது.

15) **<u>உடைகள் இழப்பிற்கான செலவு</u>**

விபத்தின் போது ஏற்பட்ட உடைகளுக்கான சேத இழப்பீடு ரூ.3,000/- (ரூபாய் மூன்றாயிரம்) என நிர்ணயம் செய்யப்படுகிறது. இதன் அடிப்படையில் கீழ்கண்டவாறு இழப்பீடு தீர்மானிக்கப்படுகிறது.

| வ. எண் | இழப்பீடு தலைப்புகளில் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | வலி மற்றும் துன்பத்திற்காக | 30,000/- |
| 2 | உதவியாளர் செலவிற்காக | 5,000/- |
| 3 | ஊட்டச்சத்து உணவிற்காக | 5,000/- |
| 4 | போக்குவரத்து செலவிற்காக | 2,000/- |
| 5 | வருமான இழப்பிற்காக | 5,000/- |
| 6 | உடைகள் இழப்பிற்காக | 3,000/- |
| | கூடுதல் | 50000/- |

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மனுதாரர் மொத்த இழப்பீடாக ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் பிரச்சனை எண்.3-ற்கு தீர்வு காண்கிறது.

1) இறுதியாக, இம்மனு பகுதியாக அதற்குரிய விகிதாச்சார செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

2) 2 ஆம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு மொத்த இழப்பீடாக ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மற்றும் அதற்குரிய வட்டி மற்றும் செலவுத்தொகையை வழங்க உத்தரவிடப்படுகிறது.

3) இழப்பீட்டுத் தொகையினை மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து ஆண்டிற்கு 7.5% பின் வட்டியும் மற்றும் செலவுத்தொகையும் சேர்த்து 2 ஆம் எதிர்மனுதாரர் இரண்டு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கி கணக்கில் அதாவது Additional Chief Judicial Magistrate Court, Kumbakonam in MACTOP Account No.17970100009585, I.O.B. Court Branch, Kumbakonam directly by NEFT or RTGS மூலம் வைப்பீடு செய்ய உத்தரவிடப்படுகிறது.

4) மனுதாரர் இந்நீதிமன்றத்தில் அவரது வங்கி கணக்கினை 10 நாட்கள் அவகாசத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

5) மனுதாரருக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகைக்கான குறைவுபடும் நீதிமன்ற கட்டணம் ரூ.63/- (ரூபாய் அறுபத்துமூன்று) 15 நாட்களுக்குள் செலுத்த உத்தரவிடப்படுகிறது.

6) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் R.O.C. No.390-A/2014/F1 dated 13.02.2014-ல் பிறப்பித்துள்ள உத்தரவுபடி தனியாக தீர்ப்பாணை வனையப்படவில்லை.

| | |
|---|---|
| மனு தாக்கலான நாள் | 15.06.2023, 13.07.2023 |
| மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 17.07.2023 |
| கோரப்பட்டுள்ள இழப்பீட்டு தொகை | ரூ.10,00,000/- |
| வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டு தொகை | ரூ.50,000/- |
| மனுவில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் | ரூ.50/- |
| இழப்பீட்டிற்கான நீதிமன்ற கட்டணம் | ரூ.113/- |
| மனுதாரர் செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணம் | ரூ.63/- |

**செலவுத்தொகை பட்டியல்**:

| தலைப்பு | மனுதாரர் | 2 ம் எதிர்மனுதாரர் |
|---|---|---|
| நீதிமன்ற கட்டணம் | ரூ.113/- | - |
| வக்காலத்து | ரூ.10/- | ரூ.10/- |
| வழக்கறிஞர் ஊதியம் | ரூ.5000/- | ரூ.5000/- |
| கூடுதல் | ரூ.5123/- | ரூ.5010/- |

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் நாள் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.03.23 18:16:42 +0530

கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி,
கும்பகோணம்.

| | |
|---|---|
| **மனுதாரர் தரப்பு சாட்சிகள்**: | |
| ம.சா.1 | கோவிந்தராஜ் |
| **மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**: | |
| ம.த.சா.ஆ.1 | 16.02.2023 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை பதிவிறக்க நகல் |
| ம.த.சா.ஆ.2 | 15.02.2023 தேதியிட்ட தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரி அசல் |
| ம.த.சா.ஆ.3 | 15.02.2023 தேதியிட்ட தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துமனையில் வழங்கப்பட்ட காயச்சான்று பதிவிறக்க நகல் |
| ம.த.சா.ஆ.4 | 10.08.2023 தேதியிட்ட TN 68 AH 6018 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர மோட்டார் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வறிக்கை பதிவிறக்க நகல் |
| ம.த.சா.ஆ.5 | 27.05.2022 தேதியிட்ட TN 68 AH 6018 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர மோட்டார் வாகனத்தின் வாகன பதிவு சான்று பதிவிறக்க நகல் |
| ம.த.சா.ஆ.6 | 26.05.2022 தேதியிட்ட TN 68 AH 6018 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர மோட்டார் வாகனத்தின் பாலிசி சான்று பதிவிறக்க நகல் |
| ம.த.சா.ஆ.7 | 21.06.2006 தேதியிட்ட TN 68 AH 6018 என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர மோட்டார் வாகனத்தை ஓட்டிய ஓட்டுனரின் ஓட்டுனர் உரிமம் பதிவிறக்க நகல் |
| ம.த.சா.ஆ.8 | 01.09.2023 தேதியிட்ட வலங்கைமான் காவல் நிலைய குற்ற எண்.50/2023 |

| | |
|---|---|
| | என்ற குற்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கை பதிவிறக்க நகல் |
| ம.த.சா.ஆ.9 | மனுதாரரின் ஆதார் அட்டை நகல் |
| ம.த.சா.ஆ.10 | மனுதாரரின் வங்கி பாஸ் புத்தகம் முதல் பக்க நகல் |
| **2 ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்: இல்லை** | |

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.03.23 18:16:35 +0530

கூடுதல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி,

கும்பகோணம்.